கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு        **26/2025**

வாதி  தரப்பு சாட்சி –2 **மூக்கன்**    என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர்,   அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு  08.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு  விசாரணை</u>**

1. எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.  எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.  தாவா சொத்தின் விஸ்தீரனம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.  தாவா சொத்து பூர்வீக சொத்தா அல்லது கிரைய வாங்கிய சொத்தா என்றால் வாதி மூக்கனின் பூர்வீக சொத்தாகும்.  தாவா சொத்தில் அரசு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டடப்பட்டுள்ளதா என்றால் வாதியின் மருமகளுக்கு கட்டடப்பட்டுள்ளது. மேற்படி வீடு அமைந்துள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.  தாவா சொத்து கிரையம் பெறப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான்.  வாதி வாதியின் மகன் மற்றும் மருமகள்  அனைவரும் கூட்டாக ஒன்றாக தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

2. மேற்படி வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் அரசால் வீடு கட்டி கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.  பிரதிவாதிக்கு அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்டி கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.  பூர்வீக சொத்தை வாதி மற்றும் பிரதிவாதி வாய்க்காரராக பிரித்து அதன்படி தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.  வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார்.  பிரதிவாதிக்கும் எனக்கும் பிரச்சனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை.  வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional   District Munsif,**
**Kulithalai.**